பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 06 2026        MONDAY  6  30 PM

<u>வணக்கம்-மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, மக்களின் வாழ்க்கைத் தரம் வெகுவாக மேம்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், இதுவரை 4 லட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) தமிழகத்தில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு, முந்தைய திமுக அரசு தான் காரணம் என்று மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன் கூறியுள்ளார்.

4) தூய்மைப் பணிகளை தனியார்மயமாக்கும் முயற்சியை தமிழக அரசு கைவிட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

5) உலக ராணுவ வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்றது.

**>>>>><<<<<**

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, மக்களின் வாழ்க்கைத் தரம் வெகுவாக மேம்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

மக்களின் நம்பிக்கையை பெறுவது சிறந்த நிர்வாகத்திற்கான எடுத்துக்காட்டாகும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

கடந்த 12 ஆண்டுகளாக மத்திய அரசு செயல்படுத்திய திட்டங்கள் மூலம், அரசு நிர்வாகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

வேளாண் துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கட்டுரையில், கடந்த 12 ஆண்டுகளாக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, வேளாண் துறை தொடர் சாதனைகளை படைத்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

உணவு தானியங்களின் உற்பத்தி இதுவரை இல்லாத அளவிற்கு 37 கோடியே 60 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், 4 லட்சம் கோடிக்கும் கூடுதலான தொகை விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இயற்கை வேளாண்மைக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் அந்த கட்டுரையில் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு, முந்தைய திமுக அரசு தான் காரணம் என்று மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன் கூறியுள்ளார்.

இன்று பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது குறுக்கிட்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

விவசாயிகளின் நலனுக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் த.வெ.க. அரசு மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தது திமுக அரசு தான் என்று அவர் குறை கூறினார்.

தமிழகத்தில் மின்தடையை அறிமுகப்படுத்தியதே திமுக தான் என்று முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இந்தப் பேரவையில் தெரிவித்ததையும் திரு. ராஜ்மோகன் சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பின்னர், எந்த தொழில் முதலீடும் பிற மாநிலங்களுக்கு செல்லவில்லை என்று தொழில்துறை அமைச்சர் செல்வி. கீர்த்தனா கூறியுள்ளார். சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>><<<<<

திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்ற, உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, த.வெ.க. அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது ஏற்புடையதல்ல என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களின் மத நம்பிக்கை மீதான உரிமையை பறிப்பது தான் த.வெ.க. அரசின் நிலைப்பாடா என்று வினவியுள்ளார்.

மத உரிமைகளை முடக்கிப் போட ஆட்சியாளர்கள் எத்தனை முறை மேல்முறையீடு செய்தாலும், தர்மம் ஒருபோதும் தோற்காது என்ற நம்பிக்கை தமிழக மக்களுக்கு உள்ளதாக திரு. நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் 12 மாநகராட்சிப் பகுதிகளில் தூய்மைப் பணிகளை தனியார்மயமாக்கும் முயற்சியை மாநில அரசு கைவிட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பகுதிகளில் தூய்மைப் பணிகளை தனியாருக்கு ஒப்படைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தலுக்கு முன்பு, சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களின் போராட்டத்திற்கு த.வெ.க. அரசு ஆதரவளித்ததையும் திரு. சண்முகம் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<

மேகதாது அணை விவகாரத்தில் புதிய நடுவர் மன்றம் தேவையில்லை என்பது தான் பா.மக.வின் நிலைப்பாடு என்று அக்கட்சி தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநில விவசாயிகளின் நிலைப்பாடும் இது தான் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தெளிவான நிலைப்பாட்டை எடுப்பதற்காக தமிழக அரசு அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு உடனடியாக அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில், இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் ஏற்பட்ட வாயுக்கசிவு சம்பவம் குறித்து, விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தேசிய மனித உரிமைகள் ஆணையம், தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த சம்பவத்தை தாமாக முன்வந்து விசாரணைக்கு மேற்கொண்ட தேசிய மனித உரிமைகள் ஆணையம், இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு தமிழக தலைமைச்செயலருக்கும், காவல்துறை தலைவருக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் உடல்நலன், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் குறித்தும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட வேண்டும் என்று நோட்டீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்த வாயுக்கசிவு காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 7-ஆக அதிகரித்துள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில், முதலமைச்சர் திரு. விஜய்-ன் பிறந்த தினத்தை முன்னிட்டு, வனத்துறை அமைச்சர் திரு. ரஞ்சித்குமார் இன்று மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

அரியலூர் மாவட்டத்தில், திருநங்கைகள் சுயதொழில் தொடங்குவதற்கான கடனுதவிகளை ஆட்சியர் திருமதி. Mirunalini இன்று வழங்கினார்.

>>>>><<<<<

தென்காசி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வைத்திருந்தது தொடர்பாக 3 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் வியாழக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. மதுபாலன் இன்று வழங்கினார்.

>>>>><<<<<

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அருகே மலைச்சாலையில் மரங்கள் முறிந்து விழுந்ததன் காரணமாக, அந்த வழித்தடத்தில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டம். மன்னார்குடியில் உள்ள அருள்மிகு ராஜகோபால சுவாமி கோவில் ஆனி தெப்பத் திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக ராணுவ வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஜெர்மனியின் Warendorf-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் பாரா ஆடவர் வில்வித்தை பிரிவில் Rajbir Singh தங்கப்பதக்கத்தையும், Suraj Singh வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் Suraj Singh - Venkatadri Kunderu இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

பெர்லின் ஜூனியர் கோப்பை ஜூடோ போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் 52 கிலோ எடைப்பிரிவில் Nungshithoi Chanu Leishangthem வெள்ளிப்பதக்கத்தையும், 63 கிலோ எடைப்பிரிவில் Linthoi Chanambam வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>><<<<<

உலக ஜூனியர் பாரா விளையாட்டு போட்டிகளில், இந்தியா 15 தங்கம், 9 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

துருக்கியின் Mersin-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் பாரா பேட்மிண்டன் பிரிவுகளில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

கலப்பு இரட்டையர் பிரிவில் Akash Ranjan Mund - Koshika Devda இணையும், ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் Gopesh Jhalani, Aryan Sharama மற்றும் Premchand Potnuru-வும், மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் Shivangi Pandey, Manisha Patel ஆகியோரும் தங்கப்பதக்கம் வென்றனர்.

>>>>><<<<<

ஆசிய இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் வேலவன் செந்தில்குமார் - ஜோஷ்னா சின்னப்பா இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில் Rathika Seelan - ஜோஷ்னா சின்னப்பா இணையும் இப்பதக்கங்களை கைப்பற்றின.

>>>>>END<<<<<